Regie stered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 15 (01-12 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 286

## தமிழீழ காவற்துறை பணிமனை திறப்பு

தமிழீழக் காவல்துறையின் இரு பணிமனைகள் இன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளன. காவல்துறையினரின் யாழ்ப்பாணப் பணிமனையை விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணித் தலைவர்கோ. மகேந்திரராசா காலை ஆறுமுப்பது மணியளவில் திறந்து வைக்கிறார். இப் பணிமனை யாழ்நகரப்பகுதியின் சட்டம், ஒழுங்குப் பராமரிப்பு வேலைகளைக் கவனிக்கும். அடுத்ததாக தமிழீழ காவல் துறையின் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவுப் (4 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு - அம்பாறை பிராந்திய தளபதி

# லெப். கேணல் ஜோய் வீரமரணம்

## 12 இராணுவம் பலி; ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தொடுவாய் மடு என்ற இடத்தில் நேற்றுமுன்தனம் சிறிலங்கா படையணி ஒன்றுடன் நடந்த சண்டையில், மட்டு. அம்பாறைத் தளபதி லெப். கேணல் ஜோய் வீரச்சாவடைந்துள்ளார். இவருடன் மேலும் மூன்று புலி வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். இராணுவத் தரப்பில் பன்னிரெண்டு பேர் கொல்லப்பட்டனர். அவர்களது ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

29-11-91 அன்று காலை 8.45 மணியளவில் முதுரையடியேற்றம் என்ற இடத்திலுள்ள இராணுவமுகாமிலிருந்து 75 இற்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர் செங்கலடியை நோக்கி கால்நடையாக ரோந்து சென்றனர். இந்த ராணுவ அணி தொடுவாய்மடு என்ற இடத்தில் வைத்து புலிகளால் வழிமறித்துத் தாக்கப்பட்டது.

இத்தாக்குதலை நடாத்திய புலி வீரர்களுக்கு தலைமை தாங்கிய தளபதி ஜோய் அவர்கள் இச்சண்டையில் படுகாயமடைந்து மறுநாள் (30-11-91) காலை 5.00 மணிக்கு வீரச்சாவடைந்தார்.

தமிழீழப்பகுதிகளில் நடைபெற்ற பல வரலாற்றுப் புகழ் மிக்க சண்டைகளில் தளபதி ஜோய் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

இருபத்திரண்டு வயது நிரம்பிய செங்கலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட தளபதி ஜோய் 1988 ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரனைக் குறியாகக் கொண்டு மணலாற்றுக் காட்டிற்குள் இந்தியப்படைகள் நடாத்திய இராணுவ நடவடிக்கைகளை முறியடிக்க நடைபெற்ற சண்டைகளில் பங்குபற்றினார்.

இவர் பங்குபற்றிய தாக்குதல்களில் தலைவர் பிரபாகரனின் இருப்பிடத்தைத் தேடி மணலாற்றுக் காட்டிற்குள் கேணல்பஸ்தியின் தலைமையில் நுழைந்த கூர்க்கா படையணியை வழிமறித்து அவர்களைதாக்கி அழித்து கேணல் பஸ்தியையும் கொன்ற வரலாற்றும் புகழ் வாய்ந்த சண்டை இதுவென்பது (4 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் நடவடிக்கை



லெப். கேணல் ஜோய்

### 5 ஆம் திகதி மீண்டும் வெளிவரும்

[யாழ்ப்பாணம்]

மண்மீட்பில் உயிர்நீத்த மாவீரர் குறிப்பேட்டின் தொடர்ச்சி டிசம்பர் ஐந்தாம்திகதிமுதல் மீண்டும் இலவச இணைப்பாக வெளிவரும். அத்துடன் இதுவரை வெளிவந்த தகவல்களின் திருத்தமும் சேர்க்கப்படவுள்ளது. எனவே தகவல்களைத் திருத்த விரும்புவோர் உடன் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

### வீரவணக்கம்

லெப். புவிராஜ்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள கொண்டச்சி எனும் இடத்தில் நேற்று முன்தினம் பதுங்கியிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் லெப் புவிராஜ் வீரச்சாவடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## தமிழகத்தில் அதிகரித்ததற்கு கருணாநிதியின் ஆதரவே காரணம்

### முன்னாள் உள்துறைச் செயலாளர்

தமிழ்நாட்டில் புலிகளின் நடவடிக்கைஅதிகரித்தமைக்கு முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி அளித்துவந்த ஆதரவுதான் காரணம் என்று முன்னாள் உள்துறைச் செயலாளர் ஆர். நாகராஜன் ஒப்புதல் வாக்குமூலம் அளித்து கூறப்பட்டிருப்பதாவது:

முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி பிறப்பித்த வாய்மொழிப் பணிப்புரையினாலும், புலிகளுக்கு வழங்கப்பட்ட அரசியல் ஆதரவினாலும் புலிகள் மிகச் செல்வாக் (3 ஆம் பக்கம் பார்க்க)

## 'மினி' அவசரகால நிலை;

## தொண்டா புலிகளுக்கு மேலும் ஒரு கடிதம்

அமைச்சர் தொண்டமான் இனப்பிரச்சினை தொடர்பாக எழுதிய மேலும் ஒரு கடிதம் நேற்று விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்கப் பெற்றதாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

## சந்திரிக்கா சுதந்திர கட்சியில்

### மீண்டும் தவறு கூடாது

#### தினேஷ் குணவர்த்தன

புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதன் மூலம் முன்னர் புரியப்பட்டது போன்ற தவறு அமைச்சர் தொண்டமானை புலிகளுடன் பேச விடுவதன் மூலம் மீண்டும் இழைக்கப்படக்கூடாது என தினேஷ் குணவர்த்தன எம். பி. (4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தொடுவாய் மடு என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் சிறிலங்கா படையணி ஒன்றுடன் நடந்த சண்டையில், மட்டு. அம்பாறைத் தளபதி லெப். கேணல் ஜோய் வீரச்சாவடைந்துள்ளார். இவருடன் மேலும் மூன்று புலி வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். இராணுவத் தரப்பில் பன்னிரெண்டு பேர் கொல்லப்பட்டனர். அவர்களது ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

29-11-91 அன்று காலை 8.45 மணியளவில் மூதுரையடியேற்றம் என்ற இடத்திலுள்ள இராணுவமுகாமிலிருந்து 75 இற்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர் செங்கலடியை நோக்கி கால்நடையாக ரோந்து சென்றனர். இந்த ராணுவ அணி தொடுவாய்மடு என்ற இடத்தில் வைத்து புலிகளால் வழிமறித்துத் தாக்கப்பட்டது.

இத்தாக்குதலை நடாத்திய புலி வீரர்களுக்கு தலைமை தாங்கிய தளபதி ஜோய் அவர்கள் இச்சண்டையில் படுகாயமடைந்து மறுநாள் (30-11-91) காலை 5.00 மணிக்கு வீரச்சாவடைந்தார்.

தமிழீழப்பகுதிகளில் நடைபெற்ற பல வரலாற்றுப் புகழ் மிக்க சண்டைகளில் தளபதி ஜோய் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

இருபத்திரண்டு வயது நிரம்பிய செங்கலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட தளபதி ஜோய் 1988 ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரனைக் குறியாகக் கொண்டு மணலாற்றுக் காட்டிற்குள் இந்தியப்படைகள் நடாத்திய இராணுவ நடவடிக்கைகளை முறியடிக்க நடைபெற்ற சண்டைகளில் பங்குபற்றினார்.

இவர் பங்குபற்றிய தாக்குதல்களில் தலைவர் பிரபாகரனின் இருப்பிடத்தைத் தேடி மணலாற்றுக் காட்டிற்குள் கேணல்பஸ்தியின் தலைமையில் நுழைந்த கூர்க்கா படையணியை வழிமறித்து அவர்களைதாக்கி அழித்து கேணல் பஸ்தியையும் கொன்ற வரலாற்றுப் புகழ் வாய்ந்த சண்டை இதுவென்பது

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் நடவடிக்கை



லெப். கேணல் ஜோய்

## வீரவணக்கம்

### லெப். புவிராஜ்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள கொண்டச்சி எனும் இடத்தில் நேற்று முன்தினம் பதுங்கியிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் லெப் புவிராஜ் வீரச்சாவடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## தமிழகத்தில் அதிகரித்ததற்கு கருணாநிதியின் ஆதரவே காரணம்

### முன்னாள் உள்துறைச் செயலாளர்

தமிழ்நாட்டில் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்தமைக்கு முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி அளித்து வந்த ஆதரவுதான் காரணம் என்று முன்னாள் உள்துறைச் செயலாளர் ஆர். நாகராஜன் ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கிறார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்து வரும் தனி நீதிபதி எம். எம். சித்தீக்கின் உத்தரவின் பேரில் திருச்சிராப்பள்ளி நீதிவானிடம் பதினாறுபக்க ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை ஆர். நாகராஜன் அளித்துள்ளார். இந்த வாக்கு மூலத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி பிறப்பித்த வாய்மொழிப் பணிப்புரையினாலும், புலிகளுக்கு வழங்கப்பட்ட அரசியல் ஆதரவினாலும் புலிகள் மிகச் செல்வாக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

ராஜீவ், பத்மநாபா கொலை வழக்கு

## 'மினி' அவசரகால நிலை; தமிழ்நாட்டில் நிலவுகிறது

### தி. மு. க. குற்றச்சாட்டு

தமிழ் நாட்டில் இன்று ஒரு 'மினி' அவசரகால நிலை நிலவுகிறது என்று தி.மு.க. வின் தீர்மானம் ஒன்று கூறுகிறது.

பொய் வழக்குகளைத் தாக்கல் செய்து அதிகாரிகள் உட்பட மக்களிடமிருந்து வலுக்கட்டாயமாக வாக்குமூலங்களைப் பெற்றும் எதிர்க்கட்சியினரை ஒழித்துக் கட்டுவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரிகள் தரப்பில் ஆஜராவதாக தி.க.செயலாளர் வீரமணி அறிவிப்பு

ராஜீவ் காந்தி, பத்மநாபா கொலை வழக்குகளில் எதிரிகளின் சார்பில் ஆஜராகிவாதாடப்போவதாக திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் கே. வீரமணி சென்னையில் அறிவித்தார்.

கே. வீரமணி விடுத்த அறிக்கையொன்றில் புலிகளுக்கு ஆதரவாகவும், உடந்தையாகவும் இருந்தார் என்ற குற்றம் சுமத்தப்பட்டு எதிரிகள் சார்பில் ஆஜராகிய வழக்கறிஞர் டி. வீரசேகரன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து எதிரிகளின் சார்பில் வாதாடுவதற்கு எந்த வழக்கறிஞர்களுக்கும் துணிவு இல்லை என்றும், வழக்கறிஞர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வீரசேகரன் கைது வழக்கறிஞர் கண்டனம்

(சென்னை)

வழக்கறிஞர் வீரசேகரன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்துச் சென்னைவழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளனர்.

பயங்கரவாதம் அழிவு நடவடிக்கைகள் ஒழிப்புச் சட்டத்தை தமிழ் நாடு அரசு பயன்படுத்துவது குறித்து சென்னை வழக்கறிஞர்கள் சங்கம் நிறை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தொண்டா புலிகளுக்கு மேலும் ஒரு கடிதம்

அமைச்சர் தொண்டமான் இனப்பிரச்சினை தொடர்பாக எழுதிய மேலும் ஒரு கடிதம் நேற்று விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்கப் பெற்றதாகத் தெரியவருகின்றது.

இந்தியாவிலிருந்து கொழும்பு திரும்பிய பின்னர் அரசாங்க தரப்பினர்களுடனும் எதிர்க்கட்சித் தலைவருடனும் பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு அவற்றின் பலாபலன்கள் குறித்தும் இனப்பிரச்சினை தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கை குறித்தும் திரு. தொண்டமான் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

பொலிஸ் காவலில்

### மீண்டும் தவறு கூடாது

#### தினேஷ் குணவர்த்தன

புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதன் மூலம் முன்னர் புரியப்பட்டது போன்ற தவறு அமைச்சர் தொண்டமானை புலிகளுடன் பேச விடுவதன் மூலம் மீண்டும் இழைக்கப்படக்கூடாது என தினேஷ் குணவர்த்தன எம். பி.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சந்திரிக்கா சுதந்திர கட்சியில்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் சந்திரிக்கா குமாரதுங்காவின் சிறிலங்கா வெகுஜன மக்கள் கட்சியும் நேற்று முன்தினம் இணைந்து கொண்டது.

அனுரா பண்டாரநாயக்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஆயுதப்படை நடவடிக்கை மிகைப்படுத்தக் கூடாது

-லலித்.

வடக்கு, கிழக்கில் போரில் ஈடுபட்டிருக்கும் ஆயுதப் படையினரின் நடவடிக்கைகள் தொடர்பாக அநாவசியமாக மிகைப்படுத்தப்பட்ட செய்திகளை அரசாங்க தகவல் சாதனங்கள் வெளியிடக் கூடாது என ஐ. தே. க அதிருப்தியாளர் குழுத்தலைவர் லலித் அத்துலத்முதலி கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரை

(3 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளோரைக் கவனிக்க பொலிஸ்குழு அமைப்பு

பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பொலிஸாரால் எப்படி நடாத்தப்படுகிறார்கள் என்பதைக் கண்காணிக்க விசேட பொலிஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வலி வடக்கில் நேற்று பரவலான விமான குண்டுவீச்சு

(நமது நிருபர்)

சிறிலங்கா விமானப் படையினரின் விமானங்கள் நேற்றும் கடுமையான குண்டுவீச்சுக்களை பரவலாக நடாத்தியுள்ளன. வசாவிளான், குரும்பசிட்டி, ஏழாலைப் பகுதிகளில் இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. மாலை ஐந்தரை மணிவரை இவ்விமானக் குண்டு வீச்சுக்கள் நடாத்தப்பட்டன. விடுதலைப் புலிகள் நடாத்திய பதில் தாக்குதலையடுத்து விமானங்கள் தாக்குதல்களை இடைநிறுத்தின. விமானங்கள் திரும்பிச் சென்ற பின் வலி மேற்கு பகுதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# டிசம். 21 அல்லது 22 இல் கொழும்பில் சார்க்

நவம்பரில் நடைபெறவிருந்து ஒத்திப் போடப்பட்ட ஆறாவது சார்க் உச்சிமாநாடு டிசம்பர் 21ம் திகதி அல்லது 22ம் திகதி கொழும்பில் நடைபெறும் என்று சிறிலங்கா வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும், அரசுத் தலைவர்கள் சந்திப்பிற்கு முன்னதாக வெளியுறவு அமைச்சர்கள் கூடி மாநாட்டுப் பிரகடனத்தின் இறுதி வடிவத்தை தயார் செய்வர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சார்க் எனப்படும் தென்னாசியப் பிராந்திய நாடுகளின் அமைப்பில் அங்கம் பெறும் பங்களாதேசம், இந்தியா, பாகிஸ்தான், பூட்டான், மாலைதீவு, நேபாளம், இலங்கை ஆகிய ஏழு நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்வர் என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கு

# ஜெயின் விசாரணைக்குழு அழைப்பாணை அனுப்புகிறது

ராஜீவ்காந்தி கொலை சதித்திட்டப் பின்னணி தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜெயின் விசாரணைக்குழு அழைப்பாணைகளை அனுப்பத் தொடங்கியுள்ளது.

இதற்கென தமிழக காங்கிரஸ், அ.இ.அ.தி.மு.க, தி.மு.க, திராவிடர் கழகம் ஆகிய அரசியற் கட்சிகளுக்கும், சி.பி.ஐ, றோ, தமிழ்நாடு, கர்நாடக புலனாய்வுத் துறைகளுக்கும் அழைப்பாணைகள் அனுப்பப்பட்டுள்ளன.

அரச வங்கிகள், ரயில் சேவை

# மக்கள் மயமாக்கும் யோசனையில்லை டி.பி.விஜயதுங்கா

(கொழும்பு)


இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ரயில்சேவை ஆகியவற்றைத் தனியார் மயப்படுத்தும் அல்லது மக்கள் மயப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை என சிறிலங்கா பிரதமர் டி.பி.விஜயதுங்கா கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த பல மாதங்களாக நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களையும், தோட்டங்களை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

களத்தில் : 18-06-1973



களத்தில் : 18-10-1991

2 ஆம் லெப். ஜீவன்

(சனத லதீஸ்வரன் - புத்தூர்)

(அண்மையில் தீவகத்தில் நடந்த இலங்கை இராணுவத்துடன் மோதலில் வீரச்சாவெய்தியவர்.)

தாயக விடுதலை வேள்வியில்
தம்முயிர் தந்தவர் வரிசையில்
பாயும் புலி வீரனே;
நீயும் இடம் எடுத்தாய்!
உன் கனவை நிறைவேற்ற
உன் ரத்தவிருந்த சுவடுகளைத் தேடி
உன் கலடிச் சுவடுகளில் நாமும்
உன்னுடன் பயணிப்போம்!

(R/1972) தீவக மக்கள்


## பதவி வெற்றிடம்

### தோட்டப் பராமரிப்பாளர்

பயன் தரு மரங்கள், உழகுத் தாவரங்கள் போன்றவற்றின் உற்பத்தியிலும் பராமரிப்பிலும் அனுபவமுள்ள தோட்டப் பராமரிப்பாளர் தேவை.

2.12.91 பி. ப. 3.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்

**யூனிவேர்சல்**
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

[B-3545]


# அபிவிருத்தியே முக்கியம் நரசிம்மராவ்

மனித உரிமைகள், ஜனநாயகம் என்பவற்றை விட அபிவிருத்திப் பணிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும் என்ற இந்தியாவின் கருத்தை வெனிசூலாவின் தலைநகர் காரகாஸில் இடம் பெற்ற ஜி.15 நாடுகளின் தலைவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது ஜி 15 எனப்படும் வளரும் நாடுகளின் மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டுப் பிரகடனத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆசியாவிலுள்ள ஒரு நாட்டிற்கும் மத்திய கிழக்கிலுள்ள ஒரு நாட்டிற்கும் அங்கத்துவம் அளிப்பதன் மூலம் ஜி-15 என்னும் இந்த அமைப்பு மேலும் விரிவாக்கப்படவுள்ளது.

மீண்டும்

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீது பேசிய தினேஷ் குணவர்த்தன (ம. ஐ. மு) எல்.ரி.ரி.ஈக்கு ஆதரவான யாழ் குடாநாட்டின் தீவுப் பகுதி மக்களுக்கு அரசு மன்

(3 ஆம் பக்கம் பார்க்க)

சந்திரிக்கா

வின் சகோதரியான சந்திரிக்கா சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து கொண்டது அநுரவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக [illegible] டுகிறது.

சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு இரு கட்சிகளினதும் இணைப்பு ஒரு தற்காலிக வெற்றி என்றாலும் காலப் போக்கில் இணைக்கட்சிக்குள் உட்பூசல் ஏற்படலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

சிறிலங்கா மௌஜன மக்கள் முன்னணி கலைக்கப்படவில்லை என்றும், கட்சியின் ஏகோபித்த முடிவிற்கிணங்க தனது கட்சி சுதந்திரக் கட்சியுடன் இணைந்துள்ளதாக சந்திரிக்கா தெரிவித்தார்.

விசுவவாசிகள் அதிகரிப்பு, அரச பயங்கரவாதம் ஆகியனவற்றை எதிர்த்துப் போராடவே தனது கட்சி சுதந்திரக் கட்சியுடன் இணைந்ததாகச் சந்திரிகா மேலும் தெரிவித்தார்

தமிழீழ

பணிமனை ஒன்று [illegible] லை 7 இல் யாழ்ப்பாண செயலகத்திற்கு முன்பாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. இப் பணிமனையின் கீழ் யாழ்குடாநாட்டின் போக்குவரத்து தொடர்பான அனைத்து விடயங்களும் ஒழுங்கு படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி வடக்கில்

யிலிருந்து பலாலி எறிகணைத் தாக்குதல்கள் [illegible] குடியிருப்புக்களை நோக்கி நடத்தப்பட்டன. இதற்கு முன்பாக பலாலி இராணுவத்தினர் ஏவிய எறிகணைகள் ஒட்டகப்புலம், வசாவிளான், வளலாய், செட்டியபுலம், செல்வநாயகபுரம், தென்மூலை, பத்தமேனி ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்துள்ளன.

எதி கள்

[illegible] நிலை உருவாகியுள்ளது என்று [illegible] குற்றஞ் சாட்டியுள்ளார்.

நீதி மற்றும் மனித நேய அடிப்படையில் இவ்விரு வழக்குகளிலும் எதிரிகளின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு நான் முடிவு செய்துள்ளேன் என்றும் கே. வீரமணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மினி

தற்கு தமிழ்நாட்டில் பயங்கரவாதம் அழிவு நடவடிக்கைகள் ஒழிப்புச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது என்று அந்தத் தீர்மானம் மேலும் கூறுகிறது.

# வேலைநிறுத்தத்திலீடுபட தொழிற்சங்கங்கள் முஸ்தீபு

(கொழும்பு)

தென் இலங்கையில் அண்மைக்காலத்தில் வேலை நிறுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் தமது கோரிக்கைகள் வெற்றுவேட்டு வென்றுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் பலவீனமான போக்கைப் பயன்படுத்தி வேலை நிறுத்தங்களை மேற்கொள்ள மேலும் பல தொழிற்சங்கங்கள் ஆயத்தங்கள் செய்துவருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழக சுங்கப்பகுதி 55படகுகளைக் கைப்பற்றியது

(சென்னை)

இலங்கை அகதிகளை அதிகாரபூர்வமற்ற முறையில் கொண்டுசெல்வதற்காக இலங்கைத் தமிழர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஐம்பத்தைந்து வெளிநாட்டுப் படகுகளை இந்திய சுங்கத்துறையினர் கைப்பற்றியுள்ளனர். நாகபட்டினம் அதிமுகாமிற்கு அருகே கடற்கரையில் கவனிப்பாரற்று விடப்பட்டிருந்த பின்னர் சுங்கத் துறையினரால் கைப்பற்றப்பட்டிருந்த இப்படகுகளின் பெறுமதி சுமார் பன்னிரண்டரை இலட்சம் ரூபாவாகும். நேற்றும், நேற்று முன்தினமும் இப்படகுகள் கைப்பற்றப்பட்டன.

# நீரைத்தேக்கும் முயற்சியில் உற்பத்திக் குழுக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாரிய குளங்களான முத்தையன்கட்டு, உடையார்கட்டு, விசுவமடு, மதவாளசிங்கன் ஆகிய குளங்கள் தவிர்ந்த பாசன நீர்ப்பாசனத்திற்கு உட்பட்ட சிறிய குளங்களில் நீரைத் தேக்கி வைக்கும் நடவடிக்கையில் கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

மட்டு - அம்பாறை

குறிப்பிடத்தக்கது.

ஆர். வி ஜி சுடுவதில் தனிச்சிறப்புடையவராகத் திகழ்ந்த லெப். கேணல் ஜோய் 1987 ஆம் ஆண்டிலிருந்து தலைவர் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர் பிரிவில் செயற்பட்டவராவார்.

யாழ் கோட்டை மீதான முதலாவது தாக்குதலிலும் முக்கிய பங்காற்றிய லெப் கேணல் ஜோய் 01-06-91 இல் மட்டு-அம்பாறை மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இவர் பதவி ஏற்ற பின்னர் கிழக்கு மாகாணத்தில் பல தாக்குதல்களை நடாத்தி சிறிலங்கா இராணுவத்திற்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருந்தார்.

15-07-91 இல் கொறக்கொட்டாஞ்சேனையில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு லெப். கேணல் ஜோய் தலைமை தாங்கினார். இத்தாக்குதலில் சிறிலங்கா படையினரிடம் இருந்து 10 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

02-08-91 கல்கிலைச் வடமுனையில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலுக்கும் லெப். கேணல் ஜோய் தலைமை தாங்கினார். இத்தாக்குதலில் 20 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், அவர்களின் ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

11-10 91 சித்தாண்டிப் பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கும் தாக்குதல்களுக்கு தலைமையேற்று நடத்திய ஜோய் அப்பொலிஸ் நிலையத்தை முற்றாக அழிப்பதில் வெற்றிகண்டார்.

இறுதியாக நேற்று முன்தினம் லெப். கேணல் ஜோயின் தலைமையில் நடந்த தாக்குதலில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 11பேர் படுகாயம் அடைந்தனர். இத்தாக்குதலில் படுகாயம் அடைந்த லெப். கேணல் ஜோய் நேற்று காலை 5.00 மணிக்கு வீரச்சாவடைந்தார்.

லெப். கேணல் ஜோய் படுகாயமடைந்துவீரச்சாவடைந்த இச்சண்டையில் மேலும், மூன்று புலிகள் வீரச்சாவடைந்தனர். லெப். மாதவன், 2-ம் லெப். றோயல், வீரவேங்கை திசன் ஆகியோரே வீரச்சாவடைந்த ஏனையோராவர். இவர்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைதெரிவித்துள்ளனர்

இம்மோதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ | ஏ கே. எல் எம் ஜி | - 01 |
| | ஏ கே எல்.எம்.ஜி ரவைஇணைப்பு | - 92 |
| ★ | ரி - 56 ரக துப்பாக்கி | - 01 |
| ★ | ரி - 56-1 ரக துப்பாக்கி | - 02 |
| ★ | ரி - 56-2 ரக துப்பாக்கி | - 02 |
| | ரவைக் கூடுகள் | - 17 |
| ★ | ரி - 81 ரக துப்பாக்கி | - 02 |
| | ரவைக் கூடுகள் | - 06 |
| ★ | 7.62 ரக நடுத்தர ரவைகள் | - 1739 |
| ★ | ரி.என்-5 ரக கைக்குண்டுகள் | - 06 |

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.